பக்கங்கள் 28

# காலை முரசு

**“உலகப் பொருளாதாரமே முடங்கும் அபாய கட்டம்”**



(விரிவான செய்தி 4ஆம் பக்கம்)

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 25 திங்கட்கிழமை 09.03.2026 | அதிர்வு 221




# இன்றைய எரிசக்தி நெருக்கடிக்கு ஜே.வி.பியேதான் முழுக் காரணம்!



## போட்டுத் தாக்குகின்றார் ரணில்

சர்வதேச விவகாரங்களில் தற்போதைய அரசு ஓர் ‘ஊமையைப் போல்’ மௌனம் காப்பதாகவும், ஜே.வி.பி. கடந்த காலங்களில் ஏற்படுத்திய முட்டுக்கட்டைகளே இன்றைய எரிசக்தி நெருக்கடிக்கு முக்கிய காரணம் என்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இந்த விமர்சனத்தை முன்வைத்தார்.

இலங்கையின் எண்ணெய் சேமிப்பு மற்றும் விநியோக முறைகள் குறித்துப் பேசிய அவர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியின் கொள்கைகளே நாட்டைப் பின்னோக்கித் தள்ளின என்று தெரிவித்து அவற்றை விவரித்தார்.

06▶

# ஈரானிய மாலுமிகளுக்கு ஒரு மாத கால இலவச விசா
# மனிதாபிமான அடிப்படையில் அரசாங்கம் தீர்மானம்

## இலங்கை யாருக்கும் அடிபணியாது என்றும் அமைச்சர் சூளுரை

இலங்கைக் கடற்பரப்பில் மீட்கப்பட்ட ஈரானிய மாலுமிகளுக்கு ஒரு மாத காலத்துக்குச் செல்லுபடியாகும் இலவச விசாக்களை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இந்தத் தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“ஈரானியக் கப்பல்களில் இருந்து மீட்கப்பட்ட மாலுமிகள், இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அவர்களுக்கு மனிதாபிமானப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலேயே இந்த ஒரு மாத கால இலவச விசா வழங்கப்படுகின்றது. எதிர்காலத்திலும் இவ்வாறான இடர்மிக்க சூழல்கள் ஏற்படும் போது,

06▶






இலங்கை அரசியல் தலைவர்கள் மற்றும் படைகளின் தளபதிகள் வழமையாகப் பேசும் பேச்சு பெரும்பாலும் ‘ஊருக்கடி உபதேசம், உனக்கு இல்லையடி’ என்ற மாதிரித்தான் அமைந்திருக்கும்.

அதினின்றும் தாமும் வேறுபட்டவர் அல்லர் என்பதை முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இப்போது தெளிவுபடுத்தி இருக்கிறார்.

“எதிரி சரணடைந்தால் எவரும் அவரைச் சுடவே கூட முடியாது” – என்று அவர் இப்போது கருத்து வெளியிட்டிருக்கிறார்.

ஈரானிய கப்பல் மாலுமிகளை இலங்கை மீட்டெடுத்தமை தொடர்பாக இலங்கை அரசை மெச்சும் விதத்தில் கருத்து வெளியிட்ட போதே அவர் இந்த விடயங்களை சுட்டிக் காட்டி இருக்கிறார்.

06▶



### பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியிலும் அநுரவின் கம்பீரப் பிரகடனம்

# போர் மேகங்கள் சூழ்ந்தாலும் மனிதநேயக் கொடி ஏந்துவோம்

## மகளிர் தினத்தில் உலகுக்கு இலங்கை அமைதிச் செய்தி



இலங்கையை உலக அரங்கில் மனித நேயம் மிக்கதொரு நாடாக மாற்றுவதே தமது அரசின் பிரதான எதிர்பார்ப்பு என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

“உலகில் எத்தகைய போர்கள் இடம்பெற்றாலும், மனிதநேயத்தின் கொடியை ஏந்திச் செல்லும் தேசமாக இலங்கை திகழ வேண்டும் என்ற செய்தியை நாம் உலகுக்கு உரக்கச் சொல்ல விரும்புகின்றோம். எமது நாடு பொருளாதார ரீதியாகப் பின்னடைவுகளைச் சந்தித்திருந்தாலும், மனிதநேயம் மிக்க மக்கள் வாழும் நாடாக இலங்கையை சர்வதேச ரீதியில் அடையாளப்படுத்துவோம்.03 ▶



# இரண்டாம் பக்கத் தொடர்ச்சி

## போர் மேகங்கள்...

அனைத்து மக்களையும் பேதமின்றி, பரிவுணர்வுடன் நடத்தும் ஓர் அரசை உருவாக்குவதில் இந்நாட்டுப் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் முக்கிய இடமுண்டு.

நுண்நிதி கடன் சுமையால் கிராமப்புறப் பெண்கள் சொல்லொணாத் துயரங்களைச் சந்தித்து வருகின்றனர். இதனைத் தடுக்கும் வகையில், முறையான சட்டங்கள் உருவாக்கப்படும். குறிப்பாக, கடன் பெறுவதற்குச் சொத்துக்கள் இல்லாத பெண்களுக்கு அரசே பிணை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும். ஒருவேளை அப்பெண்களால் கடனைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டால், அதற்கான பொறுப்பை அரசு ஏற்கும். அத்துடன், மகளிர் அமைச்சினூடாக வழங்கப்படும் நிதி உதவித் திட்டங்கள் இவ்வருடமும் அடுத்த வருடமும் மேலும் பலப்படுத்தப்படும்.

இன்று இளைஞர்களைச் சீரழிக்கும் நச்சுப் போதைப்பொருள் அனர்த்தத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவர அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும். இது தாய்மார்களின் மனங்களில் உள்ள பாரிய அச்சத்தைப் போக்கும். அதேபோல், பிள்ளைகளின் கல்விச் சுமையைக் குறைக்க அடுத்த வருடம் தரம் 6 முதல் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் அமுல்படுத்தப்படும். அறிவுடன் கூடிய, பரிவுணர்வுள்ள சமூகத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

சமூகத்தில் பெண்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வன்முறைகளைத் தடுக்க தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லையெனில், புதிய சட்டங்கள் இயற்றப்படும். அதேபோல், சில கலாசாரக் காரணிகளால் ஒடுக்கப்பட்டுள்ள பெண்களைவிடுவிப்பதற்கானநடவடிக்கைகள், எவ்வித கலாசார மோதல்களுமின்றி தேசிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்படும்.” – என்றார்.

















### உலகப் பொருளாதாரமே முடங்கும் அபாயம்

# அமைதி வலயத்தை அழித்துவிடாதீர்கள்!

### வல்லரசுகளிடம் புதுடில்லியில் வைத்து ஹர்ஷ டி சில்வா உருக்கமான கோரிக்கை



"இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் போர்ச் சூழல் உருவானால், அது இலங்கையை மாத்திரமன்றி ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரத்திலும் பாரிய எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும்." – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், அங்குள்ள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சர்வதேச கடல் பகுதியில், இலங்கையின் பிரத்தியேகப் பொருளாதாரக் கடற்பரப்புக்கு அண்மித்த பகுதியில் ஈரானியக் கப்பல் தாக்குதலுக்குள்ளான விடயம் கவலையளிக்கின்றது. இலங்கை எப்போதும் அமைதியை விரும்பும் ஒரு நாடு. மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலில் நாம் எத்தரப்புக்கும் சார்பானவர்கள் அல்லர். பிராந்திய ஸ்திரத்தன்மையையும் அமைதியையும் பேணுவதையே நாம் வலியுறுத்துகின்றோம்.

உலகின் மிகவும் பரபரப்பான கப்பல் போக்குவரத்துப் பாதையிலிருந்து இலங்கை சில கிலோமீற்றர் தொலைவிலேயே அமைந்துள்ளது. ஆண்டுதோறும் சுமார் 60 ஆயிரம் கப்பல்கள் இலங்கையைக் கடந்து செல்கின்றன. உலகுக்கான பெருமளவிலான எரிபொருள் விநியோகம் இந்தப் பாதை வழியாகவே நடைபெறுகின்றது. எனவே, இப்பகுதியில் மோதல்கள் ஏற்படுவதை நாம் எக்காரணம் கொண்டும் விரும்பவில்லை.

இந்து சமுத்திரத்தில் மோதல்கள் நீடித்தால், அது இலங்கையின் பொருளாதாரத்தில் நேரடித் தாக்கத்தைச் செலுத்தும்.

கடல் வழிப் போக்குவரத்தில் சிக்கல் ஏற்பட்டால் வர்த்தகம் பாதிக்கப்படும்.

மத்திய கிழக்கில் பணிபுரியும் இலங்கையர்களிடமிருந்து கிடைக்கும் வருவாய் குறையக்கூடும்.

பிராந்திய அமைதியின்மை காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை பாதிக்கப்படலாம்.

இந்தப் போர்ச் சூழல் சில வாரங்களுக்குள் முடிவுக்கு வந்தால் பெரிய பாதிப்புகள் இருக்காது. ஆனால் இது நீண்டகாலம் நீடித்தால், இலங்கை கடுமையான பொருளாதாரச் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும். எனவே, அனைத்துத் தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்." – என்றார்.





# புளியங்குளத்தில் கோர விபத்து! ஒருவர் பலி; இருவர் படுகாயம்!!

(கி.வசந்தன்)

வவுனியா, புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவிலிருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், முன்னால் சென்ற சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் சைக்கிளில் பயணித்தவர் ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும், மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் பயணித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குருநாகல் பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய உமர் லெப்பை அப்துல் ரவூப் என்பவரே விபத்தில் பலியானவராவார்.

சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நவீன விவசாயத்தில் புதிய பாய்ச்சல்:

# வடக்கு மாகாணத்தில் திட்டங்களை விரிவுபடுத்த ஆளுநர் அதிரடி உத்தரவு












கடந்த ஆண்டு மாகாண சபையின் நிதியுடனும் விவசாயிகளின் நேரடிப் பங்களிப்புடனும் முன்னெடுக்கப்பட்ட நவீன விவசாய முறைத் திட்டங்கள் பெருமளவு வெற்றியைத் தந்துள்ளமையால், அத்திட்டங்களைத் தொடர்ந்தும் விரிவாக முன்னெடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், ஆளுநர் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், 2025ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுகள் விரிவாக ஆராயப்பட்டன. அமைச்சு மற்றும் அதன் கீழான திணைக்களங்கள் ஒவ்வொன்றினதும் செயற்பாடுகள் தனித்தனியே மீளாய்வு செய்யப்பட்டதுடன், 2026ஆம் ஆண்டுக்குரிய தொடர் வேலைத்திட்டங்களின் தற்போதைய நிலவரங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நடப்பாண்டில் நடைமுறைப்படுத்துவதற்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ள புதிய திட்டங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அண்மையில் ஏற்பட்ட 'டித்வா' பேரிடரால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கான இழப்பீடுகள் வழங்கும் செயன்முறை குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. குறித்த இழப்பீட்டுச் செயன்முறையானது பயனாளிகளின் பெயர் விவரப் பட்டியல் பகிரங்கமாகக் காட்சிப்படுத்தப்பட்டே, வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகளால் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

மத்திய விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அண்மையில் வடக்கு மாகாணத்துக்கு உத்தியோக பூர்வ பயணமொன்றை மேற்கொண்டிருந்தபோது, மாகாண விவசாயத் திணைக்களம் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் ஆராயப்பட்ட முக்கிய விடயங்களும் இக்கலந்துரையாடலில் சபைக்குத் தெரியப்படுத்தப்பட்டன. அத்துடன், விவசாய ஆராய்ச்சிப் பிரிவால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள புதிய திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

விசேடமாக, கடந்த ஆண்டு வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து வெற்றிகரமாக முன்னெடுத்த 'தெருநாய்களைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டத்தின்' நடப்பாண்டுக்குரிய வேலைத்திட்டங்களை உடனடியாக ஆரம்பிப்பது தொடர்பாகவும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. மேலும், திணைக்கள மட்டத்தில் நிலவும் ஆளணி வெற்றிடங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பான நிர்வாக விடயங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இவ்விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள் மற்றும் பிரதிப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

"அமெரிக்கத் தாக்குதலுக்குள்ளான பகுதியில் ஓர் அமெரிக்கக் கப்பல் இருந்திருந்தால் கூட, சர்வதேச சட்டத் தின்படி அவர்கள் ஈரானியப் படையினரைக் காப்பாற்றியிருக்க வேண்டும். அதுவே சர்வதேச நியதியாகும்.

"போர்க்களத்தில் எதிரணி சரணடைய முன்வந்தால் கூட, அவர்களைச் சுட்டுக் கொல்வதற்குச் சர்வதேச சட்டத்தில் இடமில்லை. அவ்வாறிருக்கையில், விபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்று வது கட்டாயமானதாகும்." – எனத் திருவாய் நந்தமளித்திருக்கின்றார் அவர்.

நல்லது. அவர் தளபதியாக இருந்த இலங்கை இராணுவம் யுத்தத்தின் இறுதி கட்டத்தில் அப்படி நடந்து கொண்டதா என்பதை அவர் தம் மனசாட்சியைத் தொட்டு வெளிப்படையாக பதில் அளிக்க வேண்டும்.

ராஜபக்ஷக்களின் தர்பாரின் கீழ் இராணுவத் தளபதியாகப் பணியாற்றிய அவர், பின்னர் ராஜபக்ஷக்களோடு ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அவர்களை அம்பலப்படுத்துகிறேன் என்ற பெயரில் யுத்தத்தின் இறுதி கட்டத்தில் வெள்ளைக் கொடியோடு சரணடைந்த புலிகள் சுட்டுக் கொல்லப் பட்டார்கள் என்ற உண்மையை பகிரங்க மாக வெளியிட்டார். ஆயினும், பின்னர் அந்த விடயத்தில் இருந்து மெல்ல நழுவிக்கொண்டார்.

இப்போதும் கூட யுத்தத்தின் இறுதி கட்டத்தில் அவர் தலைமை வகித்த இரா ணுவம் உட்பட இலங்கைப் படைகள் எவ்வளவு மோசமாக நடந்து கொண்டன, சரணடையும் தரப்பினர் தொடர்பான நியாயபூர்வங்களை பேசும் அடிப்படைத் தகுதி அவர் தலைமை வகித்த அந்தப் படைக்கும், அந்தப் படை இந்த விடயத்தில் நடந்து கொண்ட விதம் காரணமாக அவருக்கும் இல்லை என்பது எல்லோ ருக்கும் தெரிந்த விடயம்தான்.

இப்போதும் கூட நாட்டின் உச்சச் சட்டங்கள், நியதிகள், நீதிகள் பற்றி அதிகம் பேசுகின்றார். அவர்கள் யுத்தத்தின் இறுதி கட்டத்தில் தமது படைகள் எப்படி நடந்து கொண்டன என்பதை சர்வதேச நீதிமன்றில் விசா ரிக்கும் முயற்சிக்குப் பகிரங்க அழைப்பு விடுக்கும் துணிச்சல் உள்ளவரா என்று கேட்க விரும்புகின்றேன்.

ஈரான் விவகாரத்தில் நீதி, நியாயம் பிளக்கும் அவரும் அவர் போன்ற தென்னிலங்கை தலைவர்களும் தமிழர் களுக்கு எதிரான விடயத்தில் இந்த நீதி எங்கு போய்விட்டது என்பதை தங்கள் மனதில் நிறுத்தி வெளிப்படுத்த முன் வர வேண்டும்.

* * *

இந்திய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரின் அழைப்பை ஏற்று புதுடில்லி சென்றிருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் 21 உறுப்பினர்களில் ஏழு பேர் தமிழர்கள். இன விகிதாசாரப்படி மூன்றில் ஒரு பங்கை தமிழர்கள் பெற்றிருக்கின்றனர்

இலங்கையிலிருந்து சென்றுள்ள 21 சட்டத்தரணிகளில் எம்.ஏ.சுமந்திரன் மட்டுமே ஜனாதிபதி சட்டத்தரணி தகுதி யுடையவர்.

இந்தக் குழுவினர் நாளை செவ்வாய்க் கிழமை புதுடில்லியில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் அமர்வின் போது சட்டத்தரணிகள் அணியில் அமர்ந்து உச்சநீதிமன்ற விசாரணைகளைப் பார்வையிடுவர் எனத் தெரிகின்றது.

இந்திய சட்டத்தரணிகள் மட்டுமே இந்திய நீதிமன்றங்களில் பிரசன்னமாக முடியும் என்ற நிலையில் இலங்கைச் சட்டத்தரணிகளை இந்திய உச்ச நீதிமன்றத்தின் அமர்வின் போது சட்டத் தரணிகள் வரிசையில் பிரசன்னமாகி இருப்பதற்கு இந்தியப் பிரதம நீதியரசர் அழைப்பும் அனுமதியும் வழங்கியிருக் கிறார் என அறிய வந்தது.

நாளை அந்த அமர்வின் போது நடை பெறக்கூடிய விடயங்கள் பற்றிய செய்திகள் வெளியாகும் என எதிர்பார்க் கிறேன். அப்போது அது பற்றிய தகவல் களைத் தருவேன்.

**இன்றைய எரிசக்தி...**

"எண்ணெய் சேமிப்பு முறைகள் என்பது காலங்காலமாகப் பயன்பாட்டில் உள்ளவை. முதலில் அமெரிக்க நிறுவனங்களுடனும், பின்னர் எண்ணெய் கூட்டுத்தாபனத்துடனும் நாம் இவற்றை முன்னெடுத்து வந்தோம். 2003 ஆம் ஆண்டில் திருகோண மலை எண்ணெய் தாங்கிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க நான் முயற்சி செய்தேன். அன்றே அந்தத் திட்டம் நிறைவேறியிருந்தால், இலங்கைக்கு இன்று இவ்வளவு பெரிய நெருக்கடி வந்திருக்காது. எண்ணெய் தாராளமாகக் கிடைத்திருக்கும். ஆனால் அதனை எதிர்த்தது யார்? ஜே.வி.பிதான். அதனை எம்மால் மறக்க முடியாது." – என்றும் சாடினார் ரணில்.

மேலும், 2015ஆம் ஆண்டிலும் இத்திட்டம்ஜே.வி.பியால்தடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர், 2024ஆம் ஆண் டில் நிறைவடைந்திருக்க வேண்டிய விசாகப்பட்டினம் – இலங்கை இடையி லான எண்ணெய் குழாய் திட்டத்தையும் அநுரகுமார தலைமையிலான தரப்பினரே முடக்கினர் என்றும் தெரிவித்தார்.

"இந்தத் திட்டம் செயற்பாட்டில் இருந் திருந்தால், தற்போதைய நெருக்கடியின் போது நமக்கு உதவுவதை இந்தியா தனது கடமையாகக் கருதியிருக்கும்.

அதுமட்டுமன்றி, நாம் கொண்டு வந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களையும் இவர்கள் தடுத்தனர்.

தற்போதைய உலகச் சூழல் குறித்து இந்த அரசு மௌனம் காப்பது வியப்பாக உள்ளது. ஓர் ஊமையைப் போலச் செயற்படும் இந்த அரசு, குறைந்தபட்சம் ஈரானிய ஆன்மீகத் தலைவரின் படுகொலையையாவது கண்டித்திருக்க வேண்டும். ஒரு நாட்டின் அரசை மற்றொரு நாடு பலவந்தமாக அகற்றும் முறையை ஒருபோதும் ஏற்க முடியாது. இது ஒரு சுதந்திர நாட்டின் இருப்புத் தொடர்பான ஆழமான பிரச்சினையாகும்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலகைத் தனது விருப்பப்படி இயக்க முயற்சிக்கின்றார். இஸ்ரேலுடன் இணைந்து ஈரானுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வர ட்ரம்ப் நினைத்தார். சுவிட்சர்லாந்து, நோர்வே போன்ற நாடுகள் இந்தச் செயல்கள் சர்வதேச சட்டத்துக்கு முரணானது எனத் தைரியமாகக் கூறியுள்ளன. ஆனால் இலங்கை அரசு இன்னும் ஒரு முறையான அறிக்கையை வெளியிடாமல், போர் நிறுத்தப்பட வேண்டும் என்று மட்டும் கூறி நழுவுகின்றது." – என்றும் ரணில் சுட்டிக்காட்டினார்.

**ஈரானிய மாலுமிகளுக்கு...**

இத்தகைய மனிதாபிமான முடிவுகள் எடுக்கப்படலாம்.

ஈரானிய மாலுமிகள் தொடர்பான இந்தத் தீர்மானமானது, சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் இலங்கைக்குப் பொருந்தக்கூடிய கடல்சார் சட்டங்களை மிகத் துல்லியமாகப் பின்பற்றியே எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மட்டத்தில் இலங்கை தனது மனிதாபிமானப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் உறுதியாக இருப்பதை இது உலகுக்கு வெளிப்படுத்துகின்றது. அதேவேளை, இலங்கை யாருக்கும் அடிபணியாது என்பதையும் இது எடுத்துக்காட்டுகின்றது.

இந்த விவகாரத்தைக் கையாள்வதில் இலங்கை அரசு தனது "அணிசேராக் கொள்கைக்கு" இணங்கவே செயற் பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் எந்தவொரு குறிப்பிட்ட தரப்பினருக்கும் ஆதரவாகவோ அல்லது பாதிப்பாகவோ அமையும் நோக்கத்தில் எடுக்கப்படுபவை அல்ல. இதன் மூலம் சர்வதேச அரசியலில் நடுநிலையைப் பேணுவதோடு, மனி தாபிமானக் கடமைகளையும் இலங்கை முன்னெடுத்து வருகின்றது." – என்றார்.

## மட்டுவிலில் நாளை மெய்வன்மைப் போட்டி

மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளை 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பக 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் கனகரத் தினம் மகிந்தன் தலைமையில் நடை பெற உள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வல யக் கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் ஸ்ரீகுமார னும், சிறப்பு விருந்தினராக பழைய மாணவி சட்டத்தரணி திருமதி.தர்ஷிகா திலீபனும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி ச.தொ.ச. முகாமையாளர் ப.சுதர்சன், நுணாவில் மேற்கு கிராம அலுவலர் ப.பிரதீபன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஜே.வி.பி. ஏற்படுத்திய குழப்பம்!

மத்திய கிழக்கில் பெரும் யுத்தம் வெடித்துள்ள இந்தச் சூழ்நிலையில், எரிபொருள் தொடர்பான பெரும் நெருக்கடிகளை இலங்கை எதிர் கொள்ளும் சூழல் உருவாகி இருக்கின்றது.

இந்தச் சமயத்தில் இத்தகைய நெருக்கடி நிலையை இலங்கை எதிர்கொள்வதற்கு பிரதான காரணம் தற்போது ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பி. இதுவரை கைக்கொண்டு வந்த அணுகுமுறைதான் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகக் குற்றம் சுமத்தி இருக்கின்றார்.

அவர் கூறுகின்ற விடயங்கள் உண்மையானவை. மறுக்க முடியாதவை. இவை தொடர்பில் உரிய பதிலை வழங்க வேண்டியவர் இப்போது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கதான். அவரும் அவரது கூட்டாளிகளும் முன்னர் எடுத்த கொள்கை ரீதியான நடவடிக்கைகளும் செயற்பாடுகளும்தான் இந்த நிலைமைக்குக் காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுமத்தி இருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு தம்முடைய எடுபிடிகள் மூலம் பதில் சொல்லாமல், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தாமே நேரடியாகப் பதில் கூற வேண்டும்.

தற்போது எரிபொருள் நெருக்கடி வராத விதமாக முன்னர் தாங்கள் எடுத்த நடவடிக்கைகளைக் குழப்பி அடித்தது இந்த ஜே.வி.பிதான் என்பது ரணிலின் பிரதான குற்றச்சாட்டு.

"2003 ஆம் ஆண்டில் திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க நான் முயற்சி செய்தேன். அன்றே அந்தத் திட்டம் நிறைவேறியிருந்தால், இலங்கைக்கு இன்று இவ்வளவு பெரிய நெருக்கடி வந்திருக்காது. எண்ணெய் தாராளமாகக் கிடைத்திருக்கும். ஆனால் அதனை எதிர்த்தவர்கள் யார்? ஜே.வி.பியினர்தான். அதனை எம்மால் மறக்க முடியாது.

2015ஆம் ஆண்டிலும் இத்திட்டம் ஜே.வி.பியால் தடுக்கப்பட்டது.

2024ஆம் ஆண்டில் நிறைவடைந்திருக்க வேண்டிய விசாகப்பட்டினம் - இலங்கை இடையிலான எண்ணெய்க் குழாய் திட்டத்தையும் அநுர குமார தலைமையிலான தரப்பினரே முடக்கினர். இந்தத் திட்டம் செயல்பாட்டில் இருந்திருந்தால், தற்போதைய நெருக்கடியின் போது நமக்கு உதவுவதை இந்தியா தனது கடமையாகக் கருதியிருக்கும்.

அதுமட்டுமன்றி, நாம் கொண்டு வந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களையும் இவர்கள் தடுத்தனர்."

-இப்படி விலாவாரியாக விடயங்களைப் போட்டுடைத்திருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

உண்மைதான். தென்னிலங்கையில் வாக்குகளைச் சூறையாடுவதற்காகக் காலங் காலமாக வெளிப்படுத்தி வந்த இந்திய விரோத தீவிரப் போக்கு, இதுவரை இருந்த ஆட்சியாளர்கள் எல்லாம் முதலாளித்துவவாதிகள், தாங்கள் மட்டுமே ஒரிஜினல் இடதுசாரிகள் என்ற மிதப்பு எண்ணம் போன்றவை காரணமாகக் கடந்த காலத்தில் ஜே.வி.பியினர் புரிந்த பல தவறுகள், அடாவடிகள், அட்டூழியங்கள் எண்ணில் அடங்காதவை. அவை மறக்கக்கூடியவை அல்ல. மறுக்க - மறைக்க - கூடியவையும் அல்ல.

'தன்வினை தன்னைச் சுடும்' என்பது போல முன்னர் ஜே.வி.பியினர் நடந்து கொண்ட முறைமை இப்போது அதிகாரத்துக்கு வந்தும் பதில் அளிக்க முடியாத சிக்கலில் அவர்களை மாட்டி வைத்திருக்கின்றது என்பதுதான் உண்மை.

# எதிரி சரணடைந்தால் கூட எவரும் சுடவே முடியாது!

## ஈரானியக் கப்பல் விவகாரத்தில் அநுர அரசின் இராஜதந்திர நகர்வுக்கு பொன்சேகா பாராட்டு



“சர்வதேச கடற்பரப்பில் தாக்குதலுக்குள்ளான ஈரானியக் கப்பல் மாலுமிகளை மீட்டெடுத்ததன் மூலம், இலங்கை சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்ட மிகச் சரியான முடிவையே எடுத்துள்ளது.” – என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“இலங்கைக் கடற்பரப்புக்கு அப்பால் தாக்குதலுக்குள்ளான ஈரானியக் கப்பலில் இருந்தவர்களை இலங்கைக் கடற்படையினர் மீட்டெடுத்த நடவடிக்கை, சர்வதேச கடல்சார் சமவாயங்களுக்கு உட்பட்டது. இக்கட்டான சூழலில் கடலில் தத்தளிப்பவர்களைக் காப்பாற்றுவது ஒரு நாட்டின் தார்மீகப் பொறுப்பாகும்.

தாக்குதலுக்குள்ளான பகுதியில் ஓர் அமெரிக்கக் கப்பல் இருந்திருந்தால் கூட, சர்வதேச சட்டத்தின்படி அவர்கள் ஈரானியப் படையினரைக் காப்பாற்றியிருக்க வேண்டும். அதுவே சர்வதேச நியதியாகும்.

போர்க்களத்தில் எதிரணி சரணடைய முன்வந்தால் கூட, அவர்களைச் சுட்டுக்கொல்வதற்குச்சர்வதேசசட்டத்தில் இடமில்லை. அவ்வாறிருக்கையில், விபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்றுவது கட்டாயமானதாகும்.

ஈரானியக் கப்பல் விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் எடுத்த முடிவு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட வேண்டியது. ஒருவேளை இலங்கை இந்த மனிதாபிமான நடவடிக்கையை முன்னெடுக்கத் தவறியிருந்தால், சர்வதேச மட்டத்தில் கடும் விமர்சனங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்திருக்கும்.” – என்றார்.

### போதைப்பொருள் மாபியாக்களுக்குப் பலத்த அடி

# ஒரே நாளில் 981 பேர் அதிரடியாகக் கைது!

## ஜனாதிபதியின் திட்டம் தீவிரம்



ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான “முழு நாடுமே ஒன்றாக” எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் சுமார் 981 பேர் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 989 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 13 பேர் புனர்வாழ்வுநிலையத்துக்குஅனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப் பொருள்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய, சந்தேகநபர்களிடமிருந்து, 403 கிராம் ஹெரோயின், 922 கிராம் ஐஸ், 01 கிலோகிராம் 3 கிராம் கஞ்சா, 1,189 கஞ்சா செடிகள், 435 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 15 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1,086 போதை மாத்திரைகள், 2 கிலோகிராம் 155 கிராம் மதனமோதகம் மற்றும் 2 கிலோகிராம் 377 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கிம்ஹானியின் கனவை கருக்கிய அதீத சந்தேகம்

## பதவி உயர்வு பெறவிருந்த நிலையில் காதலனால் கோரமாகப் படுகொலை



கொழும்பு, கஹதுடுவ பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த 25 வயதுடைய யுவதி ஒருவர், அவரது காதலனால் தொழிற்சாலை வளாகத்தினுள்ளேயே கத்தியால் குத்திக் கொலை செய்யப் பட்ட சம்பவம் தொடர்பில் கடந்த 5 நாள்களாகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதீத சந்தேகத்தின் காரணமாகவே இந்த விபரீதம் இடம்பெற்றுள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. எனினும், மேற்படி யுவதியைப் படுகொலை செய்த காதலன் இதுவரை கைது செய்யப்படவில்லை.

ஹொரணை – புளத்சிங்கள வீதி, கோவின்ன நாரகல பிரதேசத்தைச் சேர்ந்த எல்.ஆர். கிம்ஹானி பெரேரா (வயது 25) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

கடந்த 4ஆம் திகதி காலை வழக்கம் போல் பணிக்குச் சென்ற கிம்ஹானி, தொழிற்சாலையின் பிரதான வாயிலூடாக நுழைந்து தனது பையை வைக்கும் இடத்திற்குச் சென்றுள்ளார். அங்கு ஏற்கனவே மறைந்திருந்த அவரது காதலன், மறைத்து வைத்திருந்த கத்தியால் கிம்ஹானியைத் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

உயர்தரக் கல்வியை முடித்த பின்னர் ஆடைத் தொழிற்சாலையில் இணைந்த கிம்ஹானிக்கும், அங்கு பணிபுரிந்த பதுளை – கெப்பட்டிபொல பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கும் இடையே கடந்த ஒரு வருடமாக காதல் தொடர்பு இருந்துள்ளது.

அந்த இளைஞர் ஏற்கனவே திருமணமானவர் என்பதும், பின்னர் விவாகரத்து பெற்றவர் என்பதும் கிம்ஹானியின் வீட்டாருக்குத் தெரிந்திருந்தது.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்பு கிம்ஹானியின் பாட்டி காலமானதால், அவர் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தார். இதனால் வீட்டில் இருக்கும் நேரங்களில் காதலனுடன் தொலைபேசியில் பேசுவதைத் தவிர்த்து வந்துள்ளார். "வேலையிடத்தில் நாம் 8 மணிநேரம் ஒன்றாகவே இருக்கிறோம், வீட்டில் இருக்கும் நேரத்தில் எனது பாட்டியின் நினைவுகளுடன் இருக்க அனுமதி கொடு" என்று கிம்ஹானி தனது காதலனிடம் கோரியிருந்தார் என்று உயிரிழந்தவரின் பெரியம்மா தெரிவித்துள்ளார்.

இருப்பினும், காதலி தன்னைத் தவிர்க்கின்றார் என்ற அதீத சந்தேகத்தின் காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

5 வயதிலேயே தந்தையை இழந்த கிம்ஹானியை, அவரது தாய் நதீகா (வயது 46) பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்த்தெடுத்துள்ளார். நிர்வாகத் திறமைக்காக விரைவில் பதவி உயர்வு பெறவிருந்த நிலையிலேயே கிம்ஹானிக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

அவரது இறுதிச் சடங்குகள் கடந்த 6ஆம் திகதி வேதகேவத்த பொது மயானத்தில் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் கண்ணீருக்கு மத்தியில் இடம்பெற்றன. தலைமறைவாகியுள்ள சந்தேகநபரைக் கைது செய்யப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 'ஐஸ்' போதைப்பொருளுடன் இருவர் வசமாகச் சிக்கினர்!

## இலட்சக்கணக்கான பணமும் மீட்பு

(க.மகாதேவன்)



நாட்டின் இரு வேறு பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனைகளின் போது, 'ஐஸ்' போதைப்பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநாகல், தித்தவெல்ல எலஸ்வத்தை பகுதியில் குருநாகல் பொலிஸ் நிலைய அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில், 126 கிராம் 500 மில்லி கிராம் "ஐஸ்" போதைப்பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மாஸ்பொத்த பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஹோமாகம கோட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் பாதுக்கை, உடுமுல்ல சந்தியில் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது, 14 கிராம் 420 மில்லி கிராம் 'ஐஸ்' போதைப்பொருளுடன் 37 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து போதைப்பொருள் வியாபாரம் மூலம் ஈட்டப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், குருநாகல் மற்றும் பாதுக்கை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை!

## பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் என பாதுகாப்புப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

”மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் பதற்றமான சூழலால் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை” என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்தார்.

ஈரானிய மாலுமிகள் மீதான தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து எழுந்துள்ள பாதுகாப்புச் சந்தேகங்கள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கை எப்போதும் ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேசசட்டங்களுக்கு உட்பட்டே செயற்படுகின்றது. தற்போதைய சூழலில் நாம் மனிதாபிமானத்துக்கே முதலிடம் வழங்கி வருகின்றோம். தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசு மிகுந்த பொறுப்புடன் செயற்பட்டு வருவதால், பொதுமக்கள் இது குறித்து எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை.



அமெரிக்கத் தாக்குதலில் உயிரிழந்த ஈரானிய மாலுமிகளின் ஜனாஸாக்களை (உடல்களை) விரைவில் ஈரானுக்கு அனுப்பி வைப்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மனிதாபிமான அடிப் படையில் இந்தச் செயற்பாடுகள் துரி தப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கு விவகாரங்களில் இலங்கை நடுநிலையைப் பேணுவ தோடு, தனது எல்லைக்குட்பட்ட பகுதிக ளில் பாதுகாப்பை உறுதிப்படுத் தத் தேவையான அனைத்து முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.” – என்றார்.

# இலங்கையைப் போர்க்களமாக்க அமெரிக்கா தீட்டிய மாஸ்டர் பிளான்

## விமல் வீரவன்ச பகிரங்கமாகப் போர்க்கொடி



இலங்கையை நேரடிப் போர்க்களமாக மாற்றும் சதி நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது என்று முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“இந்தியாவின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரிலேயே ஈரான் கடற் படையைச் சேர்ந்த குழுவினர் பயிற்சியில் ஈடுபட வந்திருந்தனர். அமெரிக்கக் கடற்படையும் இதில் பங்கேற்கவிருந்த நிலையில், கடைசி நேரத்தில் அவர் கள் பின்வாங்கியுள்ளனர். அதே கால கட்டத்தில் இந்தியப் பிரதமர் மோடி இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொண்டி ருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஈரானிய போர்க்கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கம் இருந்ததா லேயே, அமெரிக்கா இந்தப் பயிற்சியி லிருந்து விலகியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. தமது நாட்டுக்கு அழைக்கப்பட்ட ஈரான் குழுவினர் மீது நீர்மூழ்கிக் கப்பல் மூலம் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டமை குறித்து இந்திய உளவுத்துறையான றோவுக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் போன்ற சம்பவங்களைக் கணிக்கும் திறன் கொண்ட இந்தியா, இந்த ஆபத்தை நிச்சயம் அறிந்திருக்கும். அவ்வாறு அறிந்திருந்தும் ஈரான் கப்பலை வெளியேற அனுமதித்தது இந்தியாவின் நம்பகத்தன்மை குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஈரானின் இரண்டாவது கப்பல் கொழும் புத் துறைமுகத்துக்கு வருவதற்கு அனுமதி கோரியபோது, அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இந்தக் கப்பலை அனுமதித்தால் வான்வழியாகத் தாக்கு தல் நடத்த நேரிடும் என அவர்கள் அச் சுறுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக் கின்றன. இதனைத் தொடர்ந்து, பாது காப்புச் செயலாளர் துயகொந்தா, ‘கப்பல் விவகாரத்தில் இலங்கை பொறுப்பேற்க முடியாது’ என ஈரான் தூதுவருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இருப்பினும் இலங்கையிலுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் பிரதி சபாநாயகர் உள்ளிட்டோர் ஜனாதிபதி யைச் சந்தித்து அழுத்தங்களைக் கொடுத் துள்ளனர். நீண்ட கலந்துரையாடல் களின் பின்னர் எட்டப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே கப்பல் திருகோண மலைத் துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் தனது இராணுவப் பலத்தை இழந்து வரும் அமெரிக்கா, இஸ் ரேலைத் தவிர்த்து வேறு பாதுகாப்பான தளங்களைத் தேடி வருகின்றது. இந்தி யப் பெருங்கடல் பிராந்தியத்தில் புவிசார் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இலங் கையை இராணுவ மையமாக மாற்ற அமெரிக்கா முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

முன்னாள் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் ஹறி குறிப்பிட்டது போல், ஆபிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா வுக்கு இடைப்பட்ட மையப்புள்ளியாக இலங்கை இருப்பதே இதற்குக் காரணமா கும். ஈரான் கப்பலைத் தடுப்பதன் மூலம் இலங்கையை ஒரு நேரடி மோதல் களமாக மாற்ற அமெரிக்கா திட்டமிடுகின்றதா என்ற அச்சம் தற்போது வலுவடைந்துள்ளது.” – என்றார்.

# இன்று முதல் பதில் மேயராக கடமையேற்கின்றார் தயாளன்



யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் திருமதி மதிவதனி விவேகானந்த ராஜா கடமை நிமித்தம் இந்தியாவுக்குச் சென்றுள்ள நிலையில் இன்று தொடக் கம் பதில் மேயராகக் கடமையேற்கின் றார் பிரதி மேயர் இம்மானுவேல் தயாளன்.

இன்று 9 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 10 நாள்கள் வரை இவர் பதில் மேயராகக் கடமையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# வடக்கு - கிழக்கு கடலோரப் பகுதி மக்களுக்கு கடல்பாசி மூலம் புதிதாக பொருளாதார வாய்ப்பு

## இந்திய உச்சிமாநாட்டில் இலங்கையின் நீலப் பொருளாதாரம் குறித்து வலியுறுத்தல்



(பூ.லின்ரன்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடலோர மக்களுக்கு நிலையான மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய கடல்பாசி தொழில்துறை வளர்ச்சி குறித்து இந்தியாவில் நடைபெற்ற 7 ஆவது இந்திய சர்வதேச கடல்பாசி கண்காட்சி மற்றும் உச்சிமாநாட்டில் முக்கியமாகப் பேசப்பட்டது.

இம்மாநாட்டில் இலங்கை மற்றும் மாலைத்தீவுகளைபிரதிநிதித்துவப்படுத்தி கடல்பாசி துறை ஆலோசகர் குலேந்திரன் சிவராம் சர்வதேச குழு உறுப்பினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

ICAR-CMFRI, கொச்சியில் நடைபெற்ற இம்மாநாட்டில் "உலக கடல்பாசி நிலைவரம் – பயிரிடல், புதுமை, செயலாக்கம், சந்தைப்படுத்தல் மற்றும் வழங்கல் சங்கிலி" என்ற தலைப்பில் உலக நிபுணர்கள் கலந்துரையாடினர்.

**வடக்கு - கிழக்கின் வாழ்வாதார சவால்கள்**

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குக் கடலோரப் பகுதிகளில் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீன்பிடி தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். ஆனால் கடல் வெப்பநிலை உயர்வு, புயல் தாக்கங்கள், மீன்வளக் குறைவு, பொருளாதார நெருக்கடி ஆகிய காரணங்களால் பாரம்பரிய வாழ்வாதாரம் சவாலுக்கு உள்ளாகியுள்ளது.

இந்த நிலையில், கடல்பாசி வளர்ப்பு சுற்றுச்சூழல் நட்பு மற்றும் நிலையான மாற்று வருமான வழியாக உருவெடுத்து வருவதாக குலேந்திரன் சிவராம் குறிப்பிட்டார்.

**2012 முதல் தொடங்கிய முயற்சி**

இலங்கையில் 2012ஆம் ஆண்டு துடுப்பு (Raft) முறையில் ஆரம்பிக்கப்பட்ட Kappaphycus alvarezii பயிரிடல், 2018ஆம் ஆண்டிலிருந்து Monoline முறைக்கு மாற்றப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இது வெறும் சிறு அளவிலான திட்டமாக இல்லாமல், 'Aqua Agriculture' எனப்படும்சமூகஅடிப்படையிலானவாழ்வாதார முறைமையாக வளர்ந்துள்ளது. குறிப்பாக பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு நிலையான வருமானம் கிடைக்க வழிவகுத்துள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இத்துறை திட்டமிட்டு விரிவுபடுத்தப்பட்டால், இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும் வாய்ப்பு இருப்பதாக அவர் வலியுறுத்தினார்.

**சவால்கள், அவசர தேவைகள்**

கடல்பாசி வளர்ப்பில் கடல் வெப்பநிலை உயர்வு, உப்பு அளவு மாற்றம், பலத்த காற்று, புயல் தாக்கம் போன்றவை முக்கிய சவால்களாக உள்ளன. மேலும் Epiphytes தாக்கம், மீன் மேய்தல், உலர்த்தல் மற்றும் சேமிப்பு வசதிகள், போக்குவரத்து கட்டமைப்பு ஆகியவை மேம்படுத்தப்பட வேண்டிய துறைகளாகும்.

அரசாங்கம் திட்டமிட்ட கடல்பாசி மண்டலங்களை அறிவித்து, பயிற்சி, நிதி உதவி, செயலாக்க மையங்கள் மற்றும் ஏற்றுமதி இணைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

**தென் ஆசியா - அடுத்த வளர்ச்சி மையம்**

உலகளவில் இந்தோனேசியா கடல்பாசி உற்பத்தியில் முன்னிலையில் உள்ளது சீனா செயலாக்கத் துறையில் ஆதிக்கம் செலுத்துகிறது. எனினும், தென் ஆசியா மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியம் அடுத்த வளர்ச்சி மையமாக உருவெடுக்கக்கூடும் என்ற நம்பிக்கை அதிகரித்து வருகிறது.

"இலங்கை மூலப்பொருள் ஏற்றுமதியாளராக மட்டுமே இருக்கக்கூடாது. மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகள், செயலாக்கம் மற்றும் தொழில்மயமாக்கல் மூலம் உலக சந்தையில் இடம்பிடிக்க வேண்டும்" என சிவராம் தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கு கடலோர மக்களின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான ஒரு புதிய வாய்ப்பாக கடல்பாசி தொழில் உருவெடுத்து வருவதாக இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

# வவுனியாவில் நான்கு இளைஞர்கள் போதை மாத்திரைகளுடன் கைது!


(கி.வசந்தன்)

போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 4 இளைஞர்கள் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 500போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இந்தக் கைது நடவடிக்கை வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷ தலைமையில் கான்ஸ்டபிள்களான அசங்க(61867), ரன்வெல(61518), மிதுசன்(91800), நியாம்(84963), றொசான் (86009) ஆகியோரைக் கொண்ட பொலிஸ் குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் இன்றையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.












# பெண்களின் வலிமை, துணிவு, சாதனைகளை கொண்டாடும் மகளிர் தின நிகழ்வு மன்னாரில்

**(மன்னார் நிருபர்)**

“பெண்களின் வலிமை, துணிவு மற்றும் சாதனைகளை கொண்டாடுவோம்“ எனும் கருப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் நகர சிறுவர் பூங்கா அரங்கில் மன்னார் குடிசார் அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பகுதி பெண்கள் அமைப்புகள் கூட்டாக இணைந்து சர்வதேச மகளிர் தின நிகழ்வை முன்னெடுத்திருந்தன.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலாளர் உள்பட பலர் கலந்து கொண்டனர். மகளிர் அமைப்புகளின் பிரதிதிகளும் பங்கு பற்றினர்.

இந்த நிகழ்வில் சாதனைப் பெண்கள் மற்றும் பெண்களோடு தோள் நின்று உழைக்கும் ஆண்களும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

இதையடுத்து கிறீன் பீஸ் சவுத் ஏசியா (GREENPEACE SOUTH ASIA ) அமைப்பின் அனுசரனையுடன் மன்னார் பிரதான நூலகச் சுவரில் பெண்களால் வரையப்பட்ட பிரம்மாண்டமான சுவரோவியம் காட்சிப்படுத்தலுக்காக வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. “காலநிலை நீதிக்கான பெண்கள்” எனும் தொனிப்பொருளில் இந்த ஓவியம் பெண்களினால் வரையப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டிருந்தது.

மன்னார் பொது நூலகத்தின் வெளிப்புறச் சுவரில் உருவாக்கப்பட்டுள்ள புதிய சமூக சுவரோவியம், கலை, அறிவியல் மற்றும் சமூகத்தின் குரல்களை ஒன்றிணைத்து, இந்தத் தீவின் வளமான உயிரியல் பல் வகைமையையும் கால நிலை பேரிடர்களுக்கு எதிராக பெண்கள் காட்டும் தலைமையையும் வெளிச் சமிட்டு காட்டுகின்றமை சிறப்பம்சமாகும்.




















# கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு

**(கற்பிட்டி சியாஜ்)**

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை நிகழ்வாக சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் பேரவை உறுப்பினர் எழுத்தாளர் வசந்தி தயாபரன் தலைமையில் பத்மா சோம காந்தன் அரங்கில் நடைபெற்றது. “ஈழமும் பெண் ஆளுமைகளும்” எனும் தலைப்பில் ஆய்வுகள் முன்வைக்கப்பட்டன.

மனோன்மணி சண்முகதாஸ் தம்பதியினரின் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து, இவான்ஜலின் முத்தம்மா தில்லையம்பலம் பற்றிய ஆய்வை மொழிபெயர்ப்பாளர் அம்பிகை டிவகலாலா நோமனும், சிவபாக்கியம் குமாரவேல் பற்றிய ஆய்வை கவிஞர் லுணுகலை ஸ்ரீயும், இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண் ஆசிரியை, அதிபர், கல்வியதிகாரி, சமூக செயற்பாட்டாளர் திருமதி.பாத்துமுத்து ஹலால்தீன் பற்றிய ஆய்வை றக்ஷனா சரிபுதீனும் சமர்ப்பித்தனர்

எழுத்தாளர் வசந்தி தயாபரன் ஆய்வரங்குக்கு செம்மையாகத் தலைமை தாங்கி, காத்திரமான கருத்துக்களையும் முன்வைத்துச் சிறப்பூட்டியமை குறிப்பிடத்தக்கது

























# சமத்துவக் கட்சியின் மகளிர் தின நிகழ்வு கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்றது

இந்த ஆண்டின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் கிளிநொச்சி, பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் சமத்துவக் கட்சியின் மகளிர் அணி பொறுப்பாளர் தர்மலிங்கம் செல்வராணி தலைமையில் நேற்று இடம்பெற்றது.

“போருக்குப் பின்னராக மறு சீரமைப்பு பெண்களின் உரிமையில்லாமல் முழுமையல்ல, பெண் விடுதலை இல்லாத இன விடுதலையும் முழுமையல்ல“ எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் “பெண்களும் சமகால சவால்களும்” என்ற தலைப்பில்ஆசிரியை சசிகலா இளங்கோமன்னனும், “பெண்களும் அரசியலும்“ எனும் தலைப்பில் சமூக செயற்பாட்டாளர் வி.சுதர்சனாவும் சிறப்புரையாற்றினார்கள்.

அத்தோடு ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சந்திரவதனி, முன்னாள் போராளி வி.வாணி, சமத்துவக் கட்சியின் தலைவர் சு.மனாகரன், கட்சியின் பொதுச் செயலாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரும் உரையாற்றினார்கள். வரவேற்புரையைப் பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் நி.சுவர்ணா நிகழ்தினார்.

கட்சியின் செயற்பாட்டாளர்கள், அமைப்பாளர்கள் மற்றும் நூற்று கணக்கான பொது மக்களின் பங்கு பற்றலுடன் சிறப்பாக இடம்பெற்றது சமத்துவக்கட்சியின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நடைபெற்றது.











# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழில் கௌரவிப்பு!

(பூ.லின்ரன்)

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர்களின் சேவையைப் பாராட்டி அவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றையதினம் யாழ்ப்பாணம் பொது நுலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் இந்த நிகழ்வு நடாத்தப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர்களுக்கு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.










# அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிரான ஊழல் வழக்கு நீதிபதி ரஷாந்த கொடவெல முன்பாக விசாரணைக்கு!



எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிரான ஊழல் வழக்கை விசாரிப்பதற்காக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷாந்த கொடவெல நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் ஊழல் வழக்கு இதுவாகும்.

கடந்த 2014ஆம் ஆண்டு லங்கா உர நிறுவனத்தின் கொள்முதல் மேலாளராகப் பணியாற்றியபோது, ஹுனுப்பிட்டியவில் உள்ள நிறுவன வளாகத்தில் "இன்டர்லோக்கிங்" கற்கள் பதிக்கும் பணியில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு முறைகேடாக லாபம் ஈட்டித் தந்தார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசுக்கு 8.8 மில்லியன் ரூபாய்க்கும் அதிக நஷ்டத்தை அவர் ஏற்படுத்தினார் எனக் கூறி, கையூட்டல் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த வாரத் தொடக்கத்தில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

லங்கா உர நிறுவனத்தின் ஊழியரான தர்ஷனி பெரேரா என்பவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

இந்த வழக்கில் 21 சாட்சிகள் மற்றும் 29 ஆவணங்களை முன்னிலைப்படுத்த அரசுத் தரப்பு தீர்மானித்துள்ளது.







# இராணுவத்தினரிடம் தம் உறவுகளைக் கையளித்த வட்டுவாகலில் சர்வதேச நீதி கோரிப் போராட்டம்

**(சண்முகம் தவசீலன்)**

“இராணுவத்திடம் கையளித்த தமது உறவுகள் எங்கே? இவர்களுக்கு என்ன நடந்தது? இந்த விவகாரத்துக்கு சர்வதேச நீதி விசாரணையே வேண்டும்!“ எனக் கோரி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் இறுதி யுத்தத்தின் சாட்சியாகக் காணப்படும் வட்டுவாகல் பாலத்தில் நேற்று – சர்வதேச மகளிர் தினத்தில் – மாபெரும் கவனவீர்ப்புப்போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது .

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 08.03.2017 அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று ஒன்பது ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், சர்வதேச மகளிர் தினமான நேற்று, “மகளிர் தினம் எமக்குத் துக்க தினம்“ எனத் தெரிவித்து தமக்கு சர்வதேச விசாரணையே தீர்வு என இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமது உறவுகளை இராணுவத்திடம் ஒப்படைத்தமையுடன், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என இதுவரை இலங்கை அரசாங்கத்தால் எந்தத் தகவலும் வெளியிடவில்லை எனத் தெரிவித்து “இனப் படுகொலையாளிகளை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்து!“, “இராணுவத்தினரிடம் ஒப்படைத்த எமது பிள்ளைகள் எங்கே?“, “வட்டுக்கோட்டைத் தீர்மானம் வழிகாட்டி – சுய நிர்ணயம் எங்கள் உரிமை“,“சர்வதேசமே பதில் சொல்!” எனப் பல்வேறு கோசங்களைத் தாங்கிய பதாதைகளுடன் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

“எங்கே, எங்கே உறவுகள் எங்கே?”, “பழைய சட்டமும் வேண்டாம் புதியசட்டமும் வேண்டாம்!”, “அழிக்காதே, அழிக்காதே!, தமிழரின் இன அழிப்பின் அடையாளமான வட்டுவாகல் பாலத்தை அழிக்காதே!“, “வேண்டும், வேண்டும், சர்வதேச விசாரணை வேண்டும்!” உள்ளிட்ட பல்வேறு கோசங்களுடன் வட்டுவாகல் பாலத்தடியில் ஆரம்பித்த கவனவீர்ப்பு போராட்ட ஊர்வலம் செல்வபுரத்தில் இராணுவத்திடம் உறவுகளைக் கையளித்த இடம் வரை சென்று நிறைவடைந்தது

இந்தப் போராட்டத்தில் முல்லைத்தீவு,யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,வவுனியா,மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், முன்னாள் யாழ் மாநகர மேயர் மணிவண்ணன், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனஒ பலரும் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின் இறுதியில் கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜர் வாசிக்கப்பட்டது. அது ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
















# தமிழினப் படுகொலைகளைச் செய்த ராஜபக்ஷக்கள் தற்போது மனிதாபிமான வேடம் தாங்கி நடிக்கின்றனர்

## ரவிகரன் எம்.பி. விசனத்துடன் சுட்டிக்காட்டு

(விஜயரத்தினம் சரவணன்)

கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையைச் செய்த கொடூரர்களான ராஜபக்ஷ தரப்பினர் தற்போது மனிதாபிமானிகளாக மாறி மத்தி. கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலுக்கு அனுதாபங்களைத் தெரிவிக்கின்றமை வேடிக்கையாக இருப்பதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தமிழினப் படுகொலையாளர்கள் தற்போது மனிதாபிமானி வேடந்தரித்து தமது உலகமகா நடிப்புத்திறன்களை வெளிப்படுத்தி வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களால் முல்லைத்தீவில. நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது வருடங்களைக் கடந்துள்ளது. பத்தாவது வருடம் ஆரம்பிக்கின்றது.

தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியைக் கேட்டு அவர்களின் போராட்டம் தொடர்கின்றது. அவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த பலநூற்றுக்கணக்கான பெற்றோர்கள் நோய்வாய்ப்பட்டும், வயது முதிர்வினாலும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடிவரும் எஞ்சியுள்ள பெற்றோரும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஏனைய உறவினர்களும் தமது தொடர் பேராட்டத்தின் பத்தாவது வருடத்தின் தொடக்க நாளில் பாரிய ஒரு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

அந்த வகையில் இறுதிக்கட்ட வட்டுவாகல் பாலத்தின் தொடக்கப் புள்ளியிலிருந்து ஆரம்பித்து வட்டுவாகல் பாலத்தின் ஊடாக இறுதிக்கட்ட போரின்போது வட்டுவாகல் பகுதியில் தமது உறவுகளை இராணுவத்திடம் கையளித்தனர் எனக் கூறப்படும் இடம்வரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இவ்வார்ப்பாட்டப் பேரணியை முன்னெடுத்துள்ளனர்.

வட்டுவாகல் பாலம் என்பது தமிழினப்படுகொலையின் நினைவுச் சின்னமாகும். எனவேதான் அந்தப்பாலத்தின் தொடக்கப் புள்ளியிலிருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இவ்வார்ப்பாட்டப்பேரணியைஆரம்பித்தமையுடன், தமது உறவுகளை இராணுவத்திடம் கையளித்த இடம் வரையில் மேற்கொண்டனர்.

குறிப்பாக கொளுத்தும் வெய்யிலிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வயது முதிர்ந்த

பெற்றோர்கள் பெரும் எண்ணிக்கையானோர் இவ்வார்ப்பாட்டத்தில் பங்கேற்றுளனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பில் பெண்கள், சிறார்களும் இவ்வார்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்றனர்.

இத்தகைய அவல நிலைகளை தாங்கி கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்த உறவுகள் தொடர்ந்தும் போராடி வருகின்றனர்.

எனினும் கடந்த கால ஆட்சியாளர்கள் இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான தீர்வை வழங்கும் விவகாரத்தில் பாராமுகத்துடனேயே செயற்பட்டு வந்தனர்.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கத்திடம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான உரிய நீதியை வழங்குமாறு எம்மால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புக்களின்போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு, சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, தமிழர் தாயகப் பரப்புக்களில் இடம்பெறும் நில அபகரிப்புக்களை நிறுத்துதல் உள்ளிட்ட விடயங்களுடன், இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு உரிய நீதியை வழங்குதல் விடயத்திலும் மிகப்பிரதானமாக எம்மால் வலியுறுத்தப்பட்டுளளது.

இருப்பினும்இதுவரைவலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியைவழங்குவதற்குஇந்தஆட்சியாளர்களும் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

மேலும் தற்போது உலகநாடுகளிடையேபோர்மேகம்சூழ்ந்துள்ளது.மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழலால் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன. 2009 இல் எம்மை அழிப்பதற்குத் துணை நின்றவர்கள் தங்களுக்கிடையில் யுத்தத்தை தொடங்கியுள்ளனர். எனினும் யுத்தத்தால் சிறார்கள், பெண்கள், அப்பாவி பொதுமக்கள் எனப் பலரும் கொல்லப்படுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாதென்பதே தமிழர்களின் நிலைப்பாடு. ஏன் எனில் தமிழர்கள் மனிதாபிமானம் மிக்கவர்கள்.

ஆனால் 2009இல் திட்டமிட்டவகையில் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிக்குள்ளும் குண்டுபோட்டும், தடைசெய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகளை வீசியும் தமிழ் இனவழிப்புச் செயற்பாட்டில் ஈடுபட்ட ராஜபக்ஷக்களின் கூடாரத்தைச் சேரந்தவர்கள் தற்போது மத்திய கிழக்கில் இடம்பெறும் போர்ச் சூழலுக்கு அனுதாபதந் தெரிவிக்கின்றனர். தற்போது மனிதாபிமானத்தைப் பற்றி பேசுகின்றனர்.

இந்தநாடு முழுவதுமே தமிழர்களுடையது என வரலாறுகள் கூறுகின்றன. இந்நிலையில் வடக்கும், கீழக்கும் பூர்வீக தமிழர் தாயகமென கோரிப் போராடியதும், தற்போதும் வடகிழக்குத்தான் தமிழர்தாயகம் எனக்கோருவதும் தமிழர்களின் பெருந்தன்மையாகும்.

இவ்வாறாக வடக்கு கிழக்குத் தமிழர் தாயகமென தமது உரித்துக்களைக் கோரியமைக்காகத் தமிழர்கள் மீது திட்டமிட்ட இனவழிப்பைமேற்கொண்டவர்கள், உறவினர்களால் கையளிக்கப்பட்ட உறவுகளைக் காணமலாக்கிய கொடூரங்களைச் செய்த கொடூரர்கள், தற்போது உலகமகா நடிகர்களாக மாறி, மனிதாபிமானிகளைப் போல நடிப்புத்திறன்களை வெளிப்படுத்துகின்றனர்.

தற்போதைய அரசு இந்த வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியை வழங்க முன்வரவேண்டும் எனவலியுறுத்திக் கேட்டுக்தொள்கின்றேன் - என்றார்.



# டிக்கோயா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று நடக்கவிருந்த கண்டனப் போராட்டத்திற்குத் தடை

(மஸ்கெலியா விசேட நிருபர்)

டிக்கோயா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று நடைபெறவிருந்த அமைதி வழி கண்டன போராட்டத்திற்கு ஹட்டன் நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு வழங்கியது

தற்கொலை செய்துகொண்ட இளம் பெண்ணின் உடலுக்கு பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் சம்பவத்திற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும், மரணமடைந்த பெண்ணின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும் நேற்று டிக்கோயா கிளங்கன் மாவட்ட ஆதார வைத்தியசாலை முன்னிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் அமைதியான முறையில் கண்டனப் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டிருந்த நிலையில், அதனைத் தடுக்க ஹட்டன் நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் கடந்த மாதம் 23 ஆம் திகதி தற்கொலை செய்துகொண்ட நிலையில், அவரது உடல் டிக்கோயா – கிளங்கன் மாவட்ட ஆதார வைத்தியசாலையின் பிணவறையில் வைக்கப்பட்டிருந்தது.

அந்நிலையில், வைத்தியசாலையில் பணிபுரியும் மூன்று பணியாளர்களால் குறித்த பெண்ணின் உடல் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டதாக வைத்தியசாலை அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்திருந்தனர். இந்தச் சம்பவம் சமூகத்தில் பெரும் அதிர்ச்சியையும்கடும்கண்டனத்தையும்ஏற்படுத்தியுள்ளது.


இருப்பினும், சம்பவம் தொடர்பாக தவறிழைத்தவர்களுக்கு எதிராக வைத்தியசாலை நிர்வாகம் இதுவரை எந்தவிதமான சட்டரீதியான அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இதனை எதிர்த்து கடந்த மாதம் 3 ஆம் திகதி கிளங்கன் வைத்தியசாலை வளாகத்தில் பாரிய எதிர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. அப்போது போராட்டக்காரர்களிடம் வைத்தியசாலை நிர்வாகம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதுவரை சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், இந்த அமைதிவழி கண்டனப் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த போராட்டத்தைத் தடுக்க நோர்வூட் பொலிஸ் நிலையத்தினால் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் கோரப்பட்டிருந்த தடை உத்தரவுக்கு அனுமதி வழங்கப்பட்டது. நீதிவான் தமயந்தி பெர்னான்டோ இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அதன்படி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், பிரதித் தலைவர் கனபதி கனகராஜ், நோர்வூட் பிரதேச சபை முன்னாள் தலைவர் குழந்தைவேல் ரவி, ஹட்டன் நகர சபை பிரதி நகரபிதா பெருமாள் சுரேந்திரன் உள்ளிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் பிற தொடர்புடையவர்களுக்கு எதிராகவே இந்த நீதிமன்ற தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



நீதிமன்ற உத்தரவு

நீதவான் நீதிமன்றம்
ஹட்டன்
2026.03.08

ஹட்டன் நீதவான் நீதிமன்ற வழக்கு எண் B 73478/26 தொடர்பான தடை உத்தரவு.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 106 (1) இன் படி, டிக்கோயா ஆதார மருத்துவமனை, மருத்துவமனை நுழைவாயில் சாலை, ஹட்டன் நோர்வுட் பிரதான சாலை அல்லது வேறு ஏதேனும் பொதுமக்கள் கூடும் இடத்தில் எந்தவொரு சட்டவிரோத ஊர்வலம், ஆர்ப்பாட்டம் அல்லது ஒன்றுகூடலையு நடத்துவதைத் தவிர்க்குமாறு பின்வரும் தரப்பினருக்கு நான் இதன் மூல உத்தரவிடுகிறேன்.

பங்குதாரர்கள் -

01. ஜீவன் தொண்டமான் - நாடாளுமன்ற உறுப்பினர் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்)

02. கனபதி கனகராஜ் - முன்னாள் மாகாண சபை உறுப்பினர் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்)

03. குழந்தைவேல் ரவி - முன்னாள் நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்)

04. துணை மேயர் - அட்டன் மாநகர சபை (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்)

05. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள்

06. பிற பங்குதாரர்கள்

.................................

ச/ஔ நீதவான்,
நீதவான் நீதிமன்றம்
ஹட்டன்.

B.DAMAYANTHI FERNANDO
Attorney-At-Law & N.P.
Commissioner of Oaths
30, Station Road,
Hatton.










# மீன் விற்பனை போர்வையில் கல்முனையில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை!

## வியாபாரி மற்றும் உதவியாளர் நேற்று மாலை கைது

**(பாறுக் ஷிஹான்)**

மீன் விற்பனை என்ற போர்வையில் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த இரு சந்தேக நபர்களை கல்முனை தலைமையகப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை வீதியில் நேற்று மாலை இக்கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ஏ.எல்.லசந்த களுஆராச்சிக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஊழல் ஒழிப்பு பிரிவின் சப் இன்ஸ்பெக்டர்களான கே.எல்.எம் முஸ்தபா மற்றும் பி.குமாரசிங்க தலைமையிலான பொலிஸார் இக்கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது 49, 23 வயதுடைய இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் வசம் இருந்து 40 மற்றும் 50 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கைதான சந்தேக நபர்களில் ஒருவர் ஏற்கனவே போதைப்பொருள் தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டிற்காக கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சந்தேக நபர். பொலிஸாரால் தற்போது மீண்டும் கைது செய்யப்பட்ட போது மற்றுமொரு சந்தேக நபர் தொடர்பில் தகவல் வழங்கியுள்ளார். இதற்கமைய சமகாலத்தில் மற்றொரு சந்தேக நபரான மீன் வியாபாரி கைதானார். கைதான இவ்விருவரும் வியாபாரி உதவியாளர் என மீன் விற்பனையுடன் செயற்பட்டு வருபவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இச்சோதனை நடவடிக்கையானது கிழக்குப் பிராந்தியத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜெயசுந்தரவின் உத்தரவின் பேரில், அம்பாறைப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்லவின்பணிப்புரைகமையசிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டார கஸ்தூரி ஆராய்ச்சி நெறிப்படுத்தலில் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸாரின் வழிகாட்டுதலின் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி தலைமையிலான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.











# 365 நாளும் பெண்களுக்கான தேசமாக இலங்கை மாறும்!

## சர்வதேச மகளிர் தினத்தில் சஜித் இலட்சியப் பிரகடனம்

“பெண்களின் உரிமைகளை வருடத்தில் ஒரு நாள் மட்டும் கொண்டாடுவதோடு நிறுத்திக் கொள்ளாமல், ஆண்டின் 365 நாள்களும் அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் நாடாக இலங்கையை மாற்றியமைப்போம்” என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மகளிர் சக்தியும் இணைந்து ‘தேசத்தைக் கட்டியெழுப்பும் அவளைப் பாதுகாப்போம்’ எனும் கருப்பொருளில் நேற்று ஏற்பாடு செய்திருந்த சர்வதேச மகளிர் தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள் வருமாறு:-

**மாணவிகளுக்கான புதிய புலமைப்பரிசில் திட்டம்**

“பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரும் மாணவிகளுக்காக ‘ஜன நளலிய’ திட்டத்தின் கீழ் புதிய புலமைப் பரிசில் திட்டம் இன்று முதல் ஆரம்பிக்கப்படுகிறது. அத்துடன், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் நாட்டின் 14,008 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான தேசிய செயற்திட்டம் முன்னெடுக்கப்படும்.

**பொருளாதார நெருக்கடியும் தாய்மார்களும்**

நாட்டின் தற்போதைய வறுமை மற்றும் மத்திய கிழக்கு போர்ச் சூழலால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புகளால் வீட்டின் தெய்வமான தாய்மார்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். குடும்ப வருமானம் குறையும் போது, பிள்ளை

தொடர்ச்சி▼













# 365 நாளும் பெண்களுக்கான தேசமாக இலங்கை மாறும்!

தொடர்ச்சி▲

களை வளர்ப்பதிலும் குடும்பத்தை நிர்வகிப்பதிலும் ஆண்கள் எதிர் கொள்வதை விட அதிக பொறுப்புகளையும் சவால்களையும் பெண்களே சுமக்க வேண்டியுள்ளது.

**டிஜிட்டல் கல்வியறிவும் 'பிரபஞ்சம்' திட்டமும்**

பெண் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, 'பிரபஞ்சம்' (சக்வல) திட்டத்தின் ஊடாக டிஜிட்டல் யுகத்திற்கு ஏற்ற நவீன கல்வியறிவை அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். வெறும் வதந்திகளுக்கும் ஆர்ப்பாட்ட நாடகங்களுக்கும் இடமளிக்காமல், யதார்த்தமான தீர்வுகளின் மூலம் பெண்களைச் சக்திப்படுத்துவதே எமது இலக்காகும்.

**நுண்கடன் பாதிப்புக்கு இலவச சட்ட உதவி**

நுண்கடன் வலையில் சிக்கித் தவிக்கும் பெண்களுக்குத் தேவையான சட்டப் பாதுகாப்பை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி முன்வந்துள்ளது. இதற்காக இலவச சட்ட உதவித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, கடன் சுமையால் நசுக்கப்பட்டுள்ள பெண்களின் உரிமைகளுக்காகச் சட்ட ரீதியாகக் குரல் கொடுக்கப்படும்.

**மாதவிடாய் வறுமை ஒழிப்பு**

கடந்த காலங்களில் நாம் 'மாதவிடாய் வறுமை' குறித்துப் பேசியபோது எள்ளி நகையாடியவர்கள், இன்று அதன் பாரதூரத்தை உணர்ந்து தேசிய கொள்கையின் அவசியத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். பாடசாலைகளை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டஇந்தவிழிப்புணர்வுத்திட்டத்தை, நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் இலவசமாகச் சென்றடையச் செய்யும் தேசிய வேலைத்திட்டமாக நாம் மாற்றுவோம்." – என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.


















# வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி - 2026 நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

விருந்தினர்கள் வரவேற்பினை தொடர்ந்து அணிவகுப்பு நிகழ்வு இடம்பெற்று, ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைக்கப்பட்டு வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி நிகழ்வுகள் ஆரம்ப மாகின.

அதிபர் திருமதி கிருஷ்ணலதா குலசங்கர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மோகனசுந்தரம் தெய்வேந்திராவும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திருமதி அன்பரசி கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிவஞானவதி (சிவப்பு), சுபேதவதி (ஊதா), திலகவதி (செம்மஞ்சள்), பகவதி (மஞ்சள்), புனிதவதி (பச்சை) இல்லங்க ளுக்கு இடையே தனிநபர் மற்றும் குழுநிலை போட்டிகள் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவி யர்களுக்கு பதக்கம் அணிவித்து சாண்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. பரிசில்களை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் திருமதி சிவரஞ்சினி தெய்வேந்திரா வழங்கி வைத்தார்.

ஒட்டுமொத்த வெளிப்பாடாக அதி கூடிய புள்ளிகளை பெற்று புனிதவதி (பச்சை) இல்லம் முதலிடத்தையும், சுபேதவதி (ஊதா) இல்லம் இரண்டாவது இடத்தையும், பகவதி (மஞ்சள்) இல்லம் மூன்றாவது இடத்தையும், திலகவதி (செம்மஞ்சள்) இல்லம் நான்காவது இடத்தையும், சிவஞானவதி (சிவப்பு) இல்லம் ஐந்தாவது இடத்தினையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.
















# மூன்றாவது கிண்ணம்

## அசால்டாக தட்டித் தூக்கியது இந்தியா

## நியூஸிலாந்தின் நிறைவேறாத கனவு

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டி அஹமதாபாத்தின் நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்றது.

இதில் இந்தியா, நியூஸிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி பந்துவீச்சைத் தெரிவுசெய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 255 ஓட்டங்களைக் குவித்தது.

தொடக்க வீரர் சஞ்சு சாம்சன் நேற்றும் அதிரடியில் மிரட்டினார். அவர் 46 பந்துகளில் 8 சிக்ஸர்கள், 5 பௌண்டரிகள் உள்பட 89 ஓட்டங்களைக் குவித்தார். இஷான் கிஷன் 54 ஓட்டங்களையும், அபிஷேக் சர்மா 52 ஓட்டங்களையும் சேர்த்தனர். கடைசியில் அதிரடி காட்டிய ஷிவம் துபே 26 ஓட்டங்களைக் குவித்தார்.

நியூஸிலாந்து சார்பாக பந்துவீச்சில் ஜேம்ஸ் நீஷம் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர், 256 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் நியூஸிலாந்து களமிறங்கியது. தொடக்க வீரர் டிம் சைபர்ட் அதிரடியாக ஆடி 52 ஓட்டங்களைக் குவித்தார். அணித்தலைவர் சான்ட்னர் 43 ஓட்டங்களைச் சேர்த்தார்.

இறுதியில், நியூஸிலாந்து 19 ஓவர்களில் 159 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இதன்மூலம் 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற இந்தியா தொடர்ந்து இரண்டாவது முறையாக உலகக் கிண்ணத்தை வென்று அசத்தியது.

இந்தியா சார்பாக பும்ரா 4 விக்கெட்டுகளையும், அக்சர் பட்டேல் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தி அசத்தினர்.

15 ஓட்டங்கள் மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு வழிவகுத்த ஜஸ்பிரீத் பும்ராவுக்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது.

இதேபோல், சஞ்சு சாம்சன் தாம் ஆடிய 5 ஆட்டங்களில் 3 அரைச் சதங்கள் உள்பட 321 ஓட்டங்கள் குவித்தார். இதனால் அவருக்கு தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது.

இந்த வெற்றி இந்தியாவுக்கு மூன்றாவது ரி-20 உலகக் கிண்ண வெற்றியாகும். நியூஸிலாந்து இத்துடன் இரண்டாவது தடவையாக இறுதிப் போட்டியில் விளையாடியுள்ளது. எனினும், அந்த அணியின் உலகக் கிண்ணக் கனவு நிறைவேறாமலே இம்முறையும் கலைந்து போயுள்ளது.



# இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமின் தலைவர் வெட்டிக் கொலை; 6 பேர் கைது!

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமின் தலைவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப் பூண்டியில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமின் தலைவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

இந்த முகாமில் 937 குடும்பங் களைச் சேர்ந்த 2,770 பேர் வசித்து வருகின்றனர்.

இந்தநிலையில், முகாமின் தலை வராக இலங்கையில் உள்ள மன்னார் மாவட்டம் முருங்கன் பகுதியை சேர்ந்த சிவகுமார் என்னும் கண்ணா செயற் பட்டு வந்துள்ளார்.

இவர் மீது அடையாளம் தெரியாத குழுவொன்று கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

பலத்த வெட்டுக் காயங்களுடன் ஆபத்தான நிலையில், கும்மிடிப்பூண்டி



அரசு மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், குறித்த நபர் இறந்ததை உறுதி செய்துள்ளனர்.

இதனால் கொதிப்படைந்த இலங் கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் மக்கள் 300 இற்கும் மேற்பட் டோர், மருத்துவமனையை முற்றுகை யிட்டுள்ளனர்.

பதற்றமான சூழல் நிலவியதால் உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் உயிரிழந்த நபரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகப் பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பொலிஸ் விசாரணையில் முகா மைச் சேர்ந்த குழு ஒன்று, முன்விரோ தம் காரணமாக அவரைக் கொலை செய்துள்ளது என்று தெரிவிக்கப்படு கின்ற நிலையில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், முகாமில் பதற்ற மான சூழல் நிலவுவதால், பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்துக் கும்மிடிப்பூண்டி சிப்காட் பொலிஸார் விசாரணைகளை மேற்கோண்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது.



# புலியைப் பார்த்து பூனை கோடு போட்ட கதையாக விஜய் வெளியிட்ட அறிவிப்பு!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் விமர்சிப்பு



தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் வெளியிட்ட அறிவிப்புகள், “புலியை பார்த்து பூனை கோடு போட்ட கதை போன்று உள்ளது,” என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமா வளவன் விமர்சித்துள்ளார்.

தவெக சார்பில் மாமல்லபுரத்தில் நடந்த மகளிர் தின விழாவில் பேசிய அக்கட்சித் தலைவர் விஜய், “அனைத் துக் குடும்பத் தலை வியருக்கும் மாதந்தோறும் 2,500 ரூபா வழங்கப் படும், அனைத்து பஸ்களிலும் மகளிருக்கு கட்டணமின்றி பயணம், தமிழகத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்படும்,” என அறிவித்திருந்தார்.

இது தொடர்பாக விசிக தலைவர் திருமாவளவன் கூறியதாவது, புலியை பார்த்து பூனை கோடு போட்டுக் கொண்ட கதை என்று சொல்வார்களே. அப்படித்தான் இதையும் சொல்ல வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

திமுக கூட்டணி வலுவாக இருக்கிறது. பல்வேறு நலத் திட்டங்களைத் திமுக அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. பல புதிய அறிவிப்புகளையும் மகளிர் நலன் கருதி அறிவித்துள்ளது. இதனை எதிர்கொள்வதற்கு இத்தகைய வாக்குறுதிகளை வழங்க வேண்டிய கட்டாயம் நேர்ந்துள்ளது. அது எந்த வகையிலும் திமுக கூட்டணியின் செல்வாக்கைப் பாதிக்காது. திமுகவுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை முடியவில்லை.- என்றார்.



# ஈரானில் களமிறங்கப்போகும் அமெ. படை; ட்ரம்பின் அறிவிப்பால் பெரும் பரபரப்பு

ஈரானின் அணு உலை எரிபொருளை மட்டுமல்ல, அணு ஆயுதங்களையும் தயாரிக்கப் பயன்படும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை கைப்பற்ற ஈரானுக்கு அமெரிக்க துருப்புக்களை அனுப்புவதை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நிராகரிக்கவில்லை.

ஈரானின் புதிய உச்ச தலைவர் “எங்களிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டும்” என்றும் ட்ரம்ப் தெரிவித்தார். இல்லையெனில் அயதுல்லா அலி கமேனிக்குப் பிறகு யார் தெரிவு செய்யப்பட்டாலும் “நீண்ட காலம் நீடிக்கப் போவதில்லை” என்றும் கூறினார்.

“என்னைப் போன்ற ஒரு ஜனாதிபதி உங்களிடம் இல்லாதபோது, ஒவ்வொரு 10 வருடங்களுக்கும் நாங்கள் திரும்பிச் செல்ல வேண்டியதில்லை என்பதை நாங்கள் உறுதி செய்ய விரும்புகிறோம்,” என்று அவர் குறிப்பிட்டார்.

பழைய ஆட்சியுடன் தொடர்புடைய ஒருவரை அங்கீகரிக்கத் தயாராக இருப்பேன் என்றும் கூறினார். “ஒரு நல்ல தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக, நான் அதைச் செய்வேன்.– என்றார்.

---

# அமெரிக்க இராணுவத்தினர் வரும்வரை நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்!

## ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி தெரிவிப்பு



அமெரிக்க இராணுவம் வரும்வரை நாங்கள் காத்திருக்கிறோம். தரைவழிப் போரில் அமெரிக்க இராணுவத்தை எதிர்கொள்ளும் அளவுக்கு நாங்கள் வலிமையானவர்கள் என்று ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி தெரிவித்துள்ளார்.

ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ்அரக்சிபலஅமெரிக்கஊடகங்களுக்கு நேரடி நேர்காணல்களை வழங்கி, அமெரிக்க தாக்குதல்கள் மற்றும் ஈரானின் நிலைப்பாடு குறித்து தனது கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

இதன்போது “போர் சூடுபிடித்து வருகிறது. ஜனாதிபதி ட்ரம்ப் உங்களை சரணடையச் சொல்கிறார். ட்ரம்ப் ஈரான் மீது தரைவழித் தாக்குதலை நடத்தத் தயாராக உள்ளார். நீங்கள் என்ன பேசுகிறீர்கள்?” என்று ஒரு அமெரிக்க அறிவிப்பாளர் ஈரானிய வெளியுறவு அமைச்சரிடம் கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தெரிவித்ததாவது,

“அமெரிக்க இராணுவம் வரும் வரை நாங்கள் காத்திருக்கிறோம். தரைவழிப் போரில் அமெரிக்க இராணுவத்தை எதிர்கொள்ளும் அளவுக்கு நாங்கள் வலிமையானவர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.”

மேலதிகமாக, ஈரான் எந்த சூழ் நிலையிலும் சரணடையத் தயாராக இல்லை. நாங்கள் மிகவும் மரியாதைக்கு ஒரிய நாடு. நாங்கள் யாருடைய அழுத்தத்துக்கும் அடிபணிய மாட்டோம். அச்சுறுத்தல்களுக்கும் நாங்கள் அடிபணிய மாட்டோம்

அவர்கள் எங்களுக்குக் காட்டும் மரியாதைக்கு ஈடாக நாங்கள் யாரையும் மதிக்கிறோம். அமெரிக்கா எங்கள் மீது எதையும் கட்டாயப்படுத்த முடியாது.– என்று வெளியுறவு அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

# கமேனியின் இழப்புக்கு பதிலடி தரும்வரை உரிய விலையை ட்ரம்ப் கொடுக்க நேரிடும்

## ஈரானின் உயர் பாதுகாப்பு அதிகாரி தெரிவிப்பு





கமேனியின் இழப்புக்கு பதிலடி தரும் வகையில் உரிய விலையை ட்ரம்ப் கொடுக்க நேரிடும் என்று ஈரான் மிரட்டல் விடுத்துள்ளது.

இந்த மிரட்டலை ஈரானின் உயர் பாதுகாப்பு அதிகாரியும், கமேனியின் மூத்த ஆலோசகருமான அலி லாரிஜனி விடுத்துள்ளார்.

அந்த நாட்டின் அரச தொலைக் காட்சியில் அவர் உரையாற்றுகையில் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையளில்,

எங்களின் எதிர்வினையை ட்ரம்ப் தவறாக மதிப்பிட்டுவிட்டார். இந்த மோதல் விரைவாக முடிவடையாது. வெனிசுலாவில் செய்ததை இங்கேயும் செய்ய முடியும் என்று ட்ரம்ப் எண்ணுகிறார்.

இப்போது அவர் மாட்டிக் கொண்டு இருக்கிறார். நாங்கள் அவரை விட மாட்டோம். அவர் செய்த செயலுக்கு உரிய விலை கொடுக்க வேண்டும். எங்களின் தலைவரை (கமேனி) கொன்றுள்ளார். 1000 இற்கும் மேற்பட்டோரையும் கொன்றுள்ளார். இது ஒரு எளிதான விடயம் அல்ல என்று இவ்வாறு அலி லாரிஜனி கூறி உள்ளார்.

இதேமிரட்டலை அவர் தமது எக்ஸ் வலைதள பதிவிலும் வெளியிட்டுள்ளார். அலி லாரிஜனியின் மிரட்டல் குறித்து பதிலளித்துள்ள ட்ரம்ப், அவர் என்ன பேசுகிறார், யார் அவர் என்று எனக்கு தெரியவில்லை. அதுகுறித்து நான் கவலைப்படப் போவதும் இல்லை.- என்றார்.

# ஈரான் மீதான தாக்குதல்கள் மூலம் சட்டத்தை மீறியுள்ள அமெ., இஸ்ரேல்!

## சுவிஸ் பாதுகாப்பு அமைச்சர் மார்ட்டின் பிஃபிஸ்டர் காட்டம்



ஈரான் மீதான தாக்குதல்கள் மூலம் அமெரிக்காவும் இஸ்ரேலும் சர்வதேச சட்டத்தை மீறியுள்ளன என்று சுவிஸ் பாதுகாப்பு அமைச்சர் மார்ட்டின் பிஃபிஸ்டர் காட்டம் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகங்களுக்கு இந்தக் கருத்துக்களை அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈரான் மீதான தாக்குதல் சர்வதேச சட்டத்தை மீறுவதாக சுவிஸ் கூட்டாட்சி கவுன்சில் கருதுகிறது.

பொதுமக்களைப் பாதுகாக்க சண்டையை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து தரப்பினருக்கும் அவர் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வன்முறையைத் தடைசெய்யும் சட்டத்தை மீறும் அனைத்து நாடுகளும், அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் உட்பட, சர்வதேச சட்டத்தை மீறியுள்ளன.- என்றார்.

சுவிஸ் பாதுகாப்பு அமைச்சரின் கருத்துக்களுக்கு ஒத்த கருத்துக்களை ஜேர்மன் துணைவேந்தரும் நிதி அமைச்சருமான லார்ஸ் கிளிங்பீலும் வெளிப்படுத்தினார்.

“இந்தப் போரின் சட்டபூர்வமான தன்மை குறித்து எனக்கு கடுமையான சந்தேகங்கள் உள்ளன. இது எங்கள் போர் அல்ல, நாங்கள் இதில் பங்கேற்க மாட்டோம்”. - என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, “விதிகள் இல்லாத, வலிமையானவர்களின் சட்டம் மட்டுமே பொருந்தும் உலகில் நாங்கள் வாழ விரும்பவில்லை”. ஈரான் மீதான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய தாக்குதல்களை சட்டவிரோதமானது என்று ஸ்பெயினும் கண்டித்துள்ளது.

## மத்திய கிழக்கில் போர் தீவிரமடையும் நிலையில்

# அமைதி மற்றும் பேச்சு வார்த்தைகளுக்கான அழைப்பை விடுத்துள்ளார் பாப்பரசர் லியோ!



மத்திய கிழக்கில் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே போர் தீவிரமடைந்து வரும் நிலையில், பாப்பரசர் லியோ சர்வதேச சமூகத்துக்கு அமைதி மற்றும் பேச்சுவார்த்தைக்கான அவசர அழைப்பை விடுத்துள்ளார்.

வத்திக்கானில் உள்ள புனித பீட்டர் சதுக்கத்தில் உரையாற்றிய அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

வன்முறை ஒருபோதும் தீர்வாகாது. அது அப்பாவி மக்களின் துயரத்தை மட்டுமே அதிகரிக்கும் என்றும் கவலை தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வரும் இந்த மோதலால் லெபனான் மற்றும் ஈரான் பகுதிகளில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் மற்றும் இடப்பெயர்வுகள் குறித்து அவர் தனது ஆழ்ந்த வருத்தத்தைப் பகிர்ந்து கொண்டார்.

போர் ஏழாவது நாளை எட்டியுள்ள சூழலில், பாப்பரசர் தனது உரையில்,

“ஆயுதங்களின் ஓசை ஓய்ந்து, தூதரக ரீதியிலான பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட வேண்டும்” என்று வலியுறுத்தினார்.

சர்வதேசத் தலைவர்கள் தங்கள் பிடிவாதத்தைக் கைவிட்டு, பொது மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு உடனடியாக போர் நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மனிதாபிமான உதவிகள் தடையின்றி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்றடைய அனைத்து நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும் என்றும், புனித பூமி மீண்டும் அமைதிப் பூங்காவாக மாற அனைவரும் பிரார்த்திக்க வேண்டும் என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

பாப்பரசர் லியோவின் இந்த அமைதிச் செய்தி, பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துவரும் வேளையில் உலகெங்கிலும் உள்ள அமைதி விரும்பிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -09.03.2026




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணி களை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள்.உங்கள் செயல்களில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வதன் மூலம் கடினமான சூழ் நிலையை சமாளிக்க இயலும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணியில் பலன்கள் உங்களுக்கு சாதமாக அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படு வீர்கள். அவரை நண்பர் போல நடத்துவதன் மூலம் ஆரோக் கியமான உறவு காணப்படும்.

இன்று மிதமான பணப்புழக்கம் காணப்படும். அதிகரிக் கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும். உங் கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

சளி சம்பந்தமான பிரச்சினை காணப்படும். குளிர்ச்சி யான உணவு வகைகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. மன சஞ்சலம் காரணமாக சாதகமான விளைவுகள் காண்பதில் தடை இருக்கும்.

பணியில் வளர்ச்சி சிறிது குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடின மாக உணர்வீர்கள். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரலாம் எனவே சகஜமான அணுகுமுறை தேவை. அமைதியான முறையில் விஷயங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் அன்பும் மதிப்பும்பெருகும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிக பொறுப்புகள் காணப்படும்.உங்கள் குடும்பத்திற்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




அதிக பொறுப்புகளும் பதட்ட நிலை யம் காணப்படும். இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்க ளுக்கு திருப்தி இருக்காது. பணியிடச் சூழலும் சிறப்பாக இருக்காது.

குழப்பமான மனநிலை காரணமாக ஸ்திரத்தன்மை குறைந்து காணப்படும். இதனால் உங்கள் துணைய டன் உங்கள் உணர்வுகளை நல்ல விதத்தில் பகிர்ந்து கொள்ள இயலாது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவிலான புதிய முதலீடு சம்பந்தமான எந்த விதமான முடிவையும் எடுக்காதீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தமான பிரச்சினை இருக்கும். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்காது.இன்று அதிக பலன்கள் எதிர்பார்க்க இயலாது. குழப்பம் நிலவும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு உதவிகரமாக இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றமும் நீங்கள் எதிபார்க்கும் வகையில் இருக்காது.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். இன்று நீங்கள் திட்டமிட்டு ஆற்றலுடன் பணியாற்ற வேண் டும்.

உங்கள் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் பரா மரிக்க நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டியது அவசியம். உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் நம்பிக்கை அதிகரிக் கும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

சிறந்த பலன்களைக் காண இன்று நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு திருப்தி உண்டாகும்.

உங்கள் மனதில் அகந்தை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும்.

பொறுப்புகள் அதிகரிப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.சூழ்நிலையை கையாள் வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று சற்று அனுகூலம் குறைவான நாள். இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை விட உங்கள் முயற்சியை சார்ந்து செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வெடுக்க நேரம் குறைவாக காணப்படும். சிறப்பான பலன் காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராம ரிக்க இயலாது. எனவே எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. அதிக செலவு கள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று சிறிது அசௌகரியமாக உணர்வீர்கள். இதனால் பதட்டம் காணப்படும். ஆரோக்கியக் குறைபாடு ஏற்படும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் நலனை மேம்படுத்தும் சில பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக் கலாம். இன்று திருப்தி நிலவும்.

உங்கள் பணியில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேல திகாரிகளின் நன்மதிப்பை பெறு வீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை உறவை பரா மரிப்பீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல நட்புணர்வு மேம்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் அதி கம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங் களிடம் காணப்படும் திருப்தி காரணமாக சிறந்த ஆரோக்கிய நிலை இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் -09.03.2026




இன்று பொதுவாக சிறந்த நாள். நீங்கள் மிகவும் கவனமாக செயலாற்ற வேண்டும். புத்திசாலித்தனத்தை மேம்படுத்திக் கொள்வது நல்லது.

உங்களுள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகளை முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.




ஏழை மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு தானங்கள் மற்றும் தொண்டு செய்ய இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.இதனால் கடவுளின் ஆசியும் மகிழ்ச்சியும் கிட்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும். சக பணியாளர்களால் தொல்லைகளை சந்திப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். நீங்கள் இருவரும் இடைவெளியுடன் பழகுவது நல்லது. இதனால் விரும்பத்தகாத சூழ் நிலைகளை தவிர்க்கலாம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும். தேவையற்ற செலவுகள் செய்ய வேண்டியிருக்கும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை இன்று காணப்படும்.உங்கள் உணவு முறைகளை கட்டுப்படுத்தவும்.




இன்றைய நாளில் சில போராட்டங்கள் இருக்கும் என்பதால் பொறுமையாக கையாள வேண்டும். பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது போராட்டங்களை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதில் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாகப் பேசவும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் தன்னபிக்கை மற்றும் ஆற்றல் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# மஹரகம நகரில் கடைத்தொகுதியொன்றில் நேற்றுப் பெரும் தீப்பரவலால் அதிக நஷ்டம்

**(உடப்பு க.மகாதேவன்)**

மஹரகம நகரில் அமைந்துள்ள கடைத்தொகுதியொன்றில் நேற்றுப் பெரும் தீப்பரவல் ஏற்பட்டது. தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கோட்டே தீயணைப்புப் பிரிவின் 04 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சில வர்த்தக நிலையங்களில் ஏற்பட்ட தீ விபத்தினால் சுமார் நான்கு கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

பமுனுவ புதிய வீதி அதிகாலை ஆடை விற்பனையாளர் சங்கத்தின் தலைவர் குசும்சிறி தசநாயக்க ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி இதனைத் தெரிவித்தார்.

காலை சில வர்த்தக நிலையங்களில் ஏற்பட்ட தீ விபத்தினால் எங்களுக்கு சுமார் நான்கு கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.



இந்தத் தீ ஆடை விற்பனை நிலையமொன்றில் ஆரம்பிக்கவில்லை. மாறாக, பாரம்பரிய அலங்கார பொருள்களை விற்பனை செய்யும் இடத்திலிருந்தே பரவியது.

எனினும், தீ பரவியவுடன் அதனைத் தடுப்பதற்கு துரிதமாகச் செயற்பட்ட பொலிஸார், நகர சபை ஊழியர்கள் மற்றும் நடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர ஆகியோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேநேரம், எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் ஆடைகளுக்கான தட்டுப்பாடு ஏற்பட எவ்விதத்திலும் இடமளிக்க மாட்டோம். – என்றார்.

இதேவேளை, தீயணைப்புப் பிரிவினரின் தாமதமே இந்தப் பாரிய அழிவுக்குக் காரணம் என பிரதேசவாசிகள் குற்றம் சுமத்துகின்றனர்.